3. அறிக்கை அளித்தல்

அவை உரிமைக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுவின் அறிக்கை அளித்தல். அவை உரிமைக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு திரு. அருணாசலம் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை குறித்து, அவையில் நடந்த நிகழ்வுகள் தொடர்பாக, அவர் எழுத்துமூலமாக வருத்தம் தெரிவித்திருப்பதால், இப்பிரச்சினையை இத்துடன் முடிக்கலாம் என, அவை உரிமைக் குழு தீர்மானித்து, அதனடிப்படையில், அறிக்கையைப் பேரவையில், அவை உரிமைக் குழுவின் தலைவராகிய நான், குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

4. அரசினர் தீர்மானங்கள்

(அ) திரு. எஸ்.ஆர் பாலசுப்பிரமணியன் அவர்கள்மீதான உரிமை மீறல் பிரச்சினை குறித்த குழுவின் அறிக்கையை விதி 229 (ஆ)-ன்கீழ் ஆய்வு செய்தல் மற்றும் அதன் பரிந்துரைகளுக்கு விதி 229 (ஈ)-ன்கீழ் இசைவு கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற, திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுவின் அறிக்கை பேரவை விதி 229 (ஆ)—ன்கீழ், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இந்த அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளுக்கு சட்டமன்றப் பேரவை விதி 229 (ஈ)-ன்கீழ், இந்தப் பேரவை இசைவைத் தரவேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

5. மானியக் கோரிக்கைகள், 2005—2006, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 19 — உயர் கல்வித் துறை

(ஆ) கோரிக்கை எண் 41 — பள்ளிக் கல்வித் துறை

(இ) கோரிக்கை எண் 44 — தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு

—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 6–4–2005 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதமும், வாக்கெடுப்பும் தொடர்ச்சி. திரு. மகேந்திரன், சரியாகப் பத்து மணித்துளிகள்.